# மிளகு கருத்திட்டம் - கஹகொலதெனிய கிராம அலுவலர் பிரிவு

யக்கலமுல்ல பிரதேச செயலகப் பிரிவில் கஹகொலதெனிய கிராம அலுவலர் பிரிவு மிளகு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள பல விவசாயிகள் இருக்கின்ற கிராம அலுவலர் பிரிவாகும். அங்கு வாழ்கின்ற கிராமவாசிகள் முகம் கொடுத்திருந்த பிரதான பிரச்சினை தரமாக மிளகு விதைகளை அதன் கதிரிலிருந்து பிரித்தெடுப்பதற்கு தொழில்நுட்ப செயல்முறையொன்றைப் பயன்படுத்தாமை மற்றும் மழை காலத்தில் ஒழுங்காக மிளகை உலர்த்துவதற்கு முடியாமையால் தரமான மிளகை உற்பத்திசெய்து சந்தைப்படுத்த முடியாமற் போனதாகும்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக சமூக பொறுப்புமுயற்சிகள் எண்ணக்கருவைப் பயன்படுத்தி இந்த கிராமவாசிகளுக்காக மேற்படி கருத்திட்டம் செயறடபடுத்தப்பட்டது.

மிளகு விதையை அதன் கதிரிலிருந்து பிரித்தெடுப்பதற்காக இந்த விவசாயிகளுக்கு மிளகு விதைகளைப் பிரித்தெடுக்கும் இயந்திரமொன்றும் மழைக்காலத்தில் மிளகை உரிய தரத்தில் உலர்த்திக்கொள்ளுவதற்காக உலர்த்தும் இயந்திரமொன்றும் வழங்கப்பட்டது. மிளகு விளைச்சல் இல்லாத காலத்தில் உலர்த்தும் இயந்திரத்தைப் பயன்படுத்தி பலாக்காய், ஈரபலாக்காய், கத்தரிக்காய் போன்ற உள்ளூர் காய்கறிகளை உலர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டது. கருத்திட்டத்தை நிலைபேறாக செயற்படுத்துவதற்காக இந்தப் பிரதேசத்தில் பரவலாகக் கிடைக்கின்ற தேங்காயைப் பயன்படுத்தி எண்ணெய் தயாரிப்பதற்காக கொப்பறா வெட்டும் இயந்திரமொன்றும் இக்கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மிளகு மற்றும் பலாக்காய், ஈரபலாக்காய், விளைச்சல் இல்லாத காலத்தில் கொப்பறா வெட்டும் இயந்திரத்தின் மூலம் வெட்டப்படுகின்ற தேங்காயை உலர்த்தும் இயந்திரத்தின் உதவியில் உலர்த்தி எண்ணெய் வடிக்கப்படுகிறது.

கருத்திட்டத்திறாக வழங்கப்பட்டுள்ள மூன்று இயந்திரங்களும் கஹகொலதெனிய கெமிதிரிய சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் தொடர்பாக பிரபல்யப்படுத்தப்பட்டதை அடுத்து கஹகொலதெனிய கிராம அலுவலர் பிரிவில் மிளகு பயிர்ச்செய்யும் விவசாயிகளுக்கு மேலதிகமாக பிரதேச செயலகப் பிரிவில் ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளும் மிளகு விதைகளை அதன் கதிரிலிருந்து பிரித்தெடுப்பதற்கும் உலர்த்துவதற்கும் இந்த இடத்தை நாடி வரத் தொடங்கியுள்ளனர்.

இயந்திரத்தின் பராமரிப்பு பணிகளைப் பேணுவதற்கும் நீர், மின்சார பட்டியல்களைச் செலுத்துவதற்கும் நிதியமொன்று பேணப்படுகின்ற அதேவேளையில் மிளகு விதைகளை அதன் கதிரிலிருந்து பிரித்தெடுப்பதற்கும் உலர்த்துவதற்கும் ரூ. 12/- கட்டணமும் தேங்காய் வெட்டும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்காக ரூ. 7/- கட்டணமும் உணவு வகைகளை உலர்த்துவதற்காக ரூ. 7/- கட்டணமும் அறவிடப்படுகின்றது.

வை.ஜி.எல். தில்ருக்ஷி

விஞ்ஞான, தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யக்கலமுல்ல